**தலைப்பு 182 வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலனோம்புகை அமைச்சு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலனோம்புகை அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 25 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலனோம்புகை அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணியிருக்காமை

அமைச்சினால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (i) மொத்த ஏற்பாடும் செலவும்

அமைச்சிற்காக செய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 424,235,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 402,290,493 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 21,944,507 அல்லது 5 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

**2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டு வருபவை | 199,235,000 | 197,344,718 | 1,890,282 | 1 |
| மூலதனம் | 225,000,000 | 204,945,775 | 20,054,225 | 9 |
| மொத்தம் | 424,235,000 | 402,290,493 | 21,944,507 | 5 |

**(ii) பாதீட்டு முரண்**

06 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 11.5 மில்லியன் தொகையான தேறிய ஏற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | அதிகுறைந்த எல்லை | உள்ளபடி யானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 18201 | 4,000,000 | 3,185,465 | 1,100,000 | 2,324,548 | 8,000,000 | 6,063,633 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

- 18201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 71,360 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுவதன் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டன.

## 1.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.4.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 2013 நவம்பர் 06 ஆந் திகதி முதல் தாபிக்கப்பட்டிருந்தமையால் 2013 ஆம் ஆண்டிற்காக போதியளவு கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

### 1.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை செயற்படுத்தல்

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(I) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஆகக் குறைந்தது 03 மாதங்களிற்கு ஒரு தடவையேனும் கூட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

அமைச்சுக்கு உரித்தான மோட்டார் வாகனமொன்று 2011 செப்தெம்பர் 28 ஆந் திகதி முதல் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 சனவரி 05 ஆந் திகதியின் பின்னர் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) வெளித்தரப்பினர்களிற்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

அமைச்சுக்குச் சொந்தமான டபள் கெப் வாகனமொன்று பெருந்தெருக்கள், துறைமுக மற்றும் கப்பற்துறை அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு கையளிக்கப்பட்ட திகதியோ அல்லது அந்த கெப் வாகனத்தின் பெறுமதி தொடர்பான தகவல்களோ அமைச்சிடம் காணப்படவில்லை.

#### (இ) ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் கையாளல்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வாடகைக்குப் பெறப்பட்டிருந்த இரண்டு வாகனங்கள் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த வாகனங்களிற்காக செலுத்தப்பட்டிருந்த வாடகை ரூபா 1,638,499 ஆகும்.

### 1.6 இணங்காமைகள்

#### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 66(i) | அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் முறையே ரூபா 384,224 மற்றும் ரூபா 1,879 என்ற வகையில் ரூபா 386,103 மொத்தமான செலவினத்திற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 1646 | அமைச்சுக்குச் சொந்தமான வாகனங்களிற்குரிய மாதாந்த சம்பவக் குறிப்புகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சுற்றறிக்கைகள் | |
| (i) 2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி அலுவலக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | கௌரவ அமைச்சருக்கு பாவிப்பதற்கு முடியுமான உத்தியோகபூர்வ வாகனங்களின் உச்ச எண்ணிக்கை 03 ஆன போதிலும், அதற்கு முரணாக அமைச்சரின் பாவனைக்காக 04 வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| 4.2 ஆம் பந்தி | எரிபொருள் படி மாதாந்த படியொன்றாக செலுத்தப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக அமைச்சரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த 04 வாகனங்களிற்காக மாதாந்தம் ரூபா 200,000 இற்கான முத்திரைப் படிவங்களிற்கு எரிபொருள் வழங்கப்பட்டிருந்ததுடன் எதிர்வரும் மாதங்களிற்காகவும் எரிபொருள் முத்திரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (ii) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 2:11 ஆம் உப பந்தி | ஒவ்வொரு 06 மாதங்களிற்கு ஒருமுறை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான பரிசோதனை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 1.7 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 09 | 08 | 01 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1213 | 965 | 248 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 26 | 22 | 04 |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 04 | 01 | 03 |
| | மொத்தம் | 1253 | 997 | 256 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 256 வெற்றிடங்களை நிரப்பவதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட மனித வளங்கள்

அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள் தொடர்பில் வெளிப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| பதவியினர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பு | காலப்பகுதி |
|---|---|---|---|
| பொது உதவியாளர் | 02 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் | 2013 ஆம் ஆண்டில் |
| சாரதி | 02 | | |
| பணி ஒப்படைத்தலின் படி | 01 | | |
| அலுவலக உதவியாளர் | 01 | | |